


Perayaan Warisan George Town
喬治市入遺慶典
ஜோர்ஜ் டவுன் பாரம்பரியப் பண்பாட்டு விழா

11th Anniversary Celebration for
**GEORGE TOWN**
UNESCO World Heritage Site

United Nations
Educational, Scientific and
Cultural Organization

Melaka & **George Town**
Historic Cities of the
Straits of Malacca

# வாருங்கள் கொண்டாடுவோம்!

இந்த ஆண்டு ஜோர்ஜ் டவுன் பண்பாட்டு விழா 2019, ஜோர்ஜ் டவுனின் சடங்குகளுக்கும் விழா நிகழ்வுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. விழாவிற்குச் செல்வோர், நாங்கள் கவனமாக ஏற்பாடு செய்திருக்கும் ஊடாடும் பட்டறைகள், நிகழ்ச்சிகள் மற்றும் தள விஜயங்களால் ஒரே இரவில் சடங்குகள் மற்றும் விழா நிகழ்வுகளின் கூறுகளை அனுபவிக்கும் வாய்ப்பினைப் பெறுவர்.

பங்கு கொள்ளும் சமூகங்கள் பாரம்பரியக் கலாச்சாரக் கூறுகளை அடையாளம் காண்பதற்கும் ஆவணப்படுத்துவதற்குமான செய்முறைத் திறனை உண்டாக்கிக் கொள்ளும் பொருட்டு இந்த ஆண்டுத் துவக்கத்தில் சமூகம் சார்ந்த விளக்க விபரப் பட்டியலிடும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் முயற்சிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், இந்த கலாச்சாரப் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதற்கான ஒட்டு மொத்த ஆதரவை ஊக்குவிப்பதற்காகவும் பட்டியலிடும் செயல் முறையின் சில வெளியீடுகளை இந்த பாரம்பரியக் கொண்டாட்டத்தில் பகிர்ந்து கொண்டுள்ளோம்.

இந்தச் செயல்களின் மூலம், சடங்குகள் மற்றும் விழாக்களின் மதிப்பும், முக்கியத்துவமும் அதிகமான மக்களிடம் குறிப்பாக இளைய தலைமுறையினரிடம் பரிமாறிக் கொள்ளப்படுமென்று நம்புகிறோம். மிக முக்கியமாக இந்த பாரம்பரிய நகரத்தின் குறிப்பிடத்தக்க பன்முகத்தன்மையின் மத்தியில் நமது ஒற்றுமைகளை மதித்து மரியாதை கொடுப்பதன் மூலம் நாம் அடைந்திருக்கும் அமைதியையும், நல்லிணக்கத்தையும் போற்றுவோம்.

ஒன்று சேர்ந்து நமது கலாச்சார பரம்பரியத்தைப் பாதுகக்க எங்களுடன் இணையுங்கள். வாருங்கள் கொண்டாடுவோம்!



டாக்டர் ஆங் மிங் சி
தயாரிப்பு நிர்வாகி
ஜோர்ஜ் டவுன் பண்பாட்டு விழா 2019

# தள சுற்றுலாக்கள்

## 6 ஜூலை சனிக்கிழமை



### மாநில சீனர் (பினாங்கு) சங்கம்
*13, பேராக் ரோடு, காலை 9.00 - காலை 11.00*

பெர்னக்கான் திருமணத்திற்கு போயிருக்கிறீர்களா? விழாவிற்கான நடன அசைவுகள் ஏதும் தெரியுமா? உதவிக்குறிப்பு: இது ஜோகெட். டொக் பஞ்ஜாங்க் விருந்தின் உணவு வகைகளை எப்பொழுதாவது சுவைத்ததுண்டா? சிலவற்றை இங்கு மாதிரி பாருங்கள்.மேலும் வேடிக்கைக்காக பாபா ந்யோன்யா ஆடைகளை அணிந்து வாருங்கள்.



### நாட்டுக்கோட்டை நகரத்தார் பாரம்பரிய சமூகம்
*124, லெபுஹ் பினாங்கு, நண்பகல் 12.00 - மதியம் 2.00*

பழங்கால, உயிரோட்டமுள்ள பாரம்பரிய செட்டியார் அலுவலகத்தைப் பார்வையிடும் இந்த அரிய வாய்ப்பைப் பிடித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நிதியாண்டின் துவக்கத்திலும், ஆசீர்வாதத்துடன் புதுக் கணக்குத் துவங்கும் வைபவத்தை நேரடியாகக் காணுங்கள். பாரம்பரிய சிற்றுண்டியையும், தேனீரையும் அனுபவியுங்கள்.

## 7 ஜூலை ஞாயிறு



### கபிடான் கெலிங்க் மசூதி
*14, பக்கின்ஹாம் சாலை, காலை 10.00 - நண்பகல் 12.00*

கம்பீரமான மசூதியைச் சுற்றிப்பாருங்கள். அகட் நிகஹ் எனும் இந்திய இஸ்லாமியர்களின் திருமணச் சடங்கைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். இந்த விழாவின்பொழுது வழங்கப்படும் எளிமையான ஆனால் தனித்துவமான பண்டிகைச் சிற்றுண்டிகளை ருசித்துப் பாருங்கள்.



### பினாங்கு ஐரோப்பியஆசிய சங்கம்
*107-A, ஜாலான் க்லாவை, நண்பகல் 1.00 - மதியம் 3.00*

பொன்போன்ற முதியவர்கள் மற்றும் ராக் 'என்' ரோல் நடனம் ஆகியவற்றுடன் முழுமையான இசைக்குழு நிகழ்ச்சியுடன் கூடிய ஒரு யூரேசிய வழக்கப்படி நடக்கும் திருமணத்தைக் கண்டு அனுபவிக்கவும். முல்லிகதவனி சூப் மற்றும் சுகி கேக் போன்ற பாரம்பரிய யூரேசியச் சுவைகளுடன் அதை நிறைவு செய்யுங்கள்.



### பினாங்கு குஜராத்தி சமாஜம்
*41, ஜலான் க்ரீன் ஹால், மாலை 4.00 - மாலை 6.00*

குஜராத்தி சமூகத்தினர் தங்கள் பாரம்பரிய திருமண பழக்கவழக்கங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறார்கள். ராஸ் நடனத்தைத் தெரிந்து கொள்வதுடன் ஒரு உண்மையான குஜராத்தி உணவை ரஸியுங்கள்.

## 8 ஜூலை திங்கள்



### பினாங்கு வட்டா குர்த்வாரா சாஹிப் ஒன்றியம்
*எண் 87, ஜலன் குருத்வாரா, காலை 10.00 - நண்பகல் 12.00*

குருத்வாரா (வழிபாட்டுத் தலத்தை) சுற்றிப் பார்ப்பதுடன், ஒரு சீக்கிய சிறுவன் தனது முதல் தலைப்பாகையைப் பெறுகின்ற தஸ்டர் பண்டாவை நேரடியாகப் பார்க்கவும். டர்பன் கட்டுவதை உங்கள் கையால் முயற்சி செய்து பார்ப்பதுடன், சைவ உணவிலும் பங்கேற்கவும்.



### நாம் ஹூய் வூய் கூன் ஒன்றியம்
*463, லெபுஹ் சுலிய*

சங்கக் கட்டிடத்தின் வளமான வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். ஒரு கான்டோனியன் இசைக் கூத்து நாடகத்தை நேரடியாகக் கண்டு களிக்கும் அதே நேரம் சில ‘நம் ஹூய்’ தின்பண்டங்களையும் உண்டு மகிழுங்கள்.

குறிப்பு: தளச் சுற்றுலாக்களில் பங்கு கொள்வதற்கு இங்கே பதிவு செய்யவும்: **event.howei.com/gthc2019**. பொதுவான கட்டணம்: தளம் ஒன்றிற்கு தலா 50 ரிங்க்கிட் *MyKad / MyKid* அட்டை உள்ளவர்களுக்கு: தளம் ஒன்றிற்கு தலா 30 ரிங்க்கிட். தயவு செய்து வழிபாட்டு இடங்களுக்கு வருகை தரும்பொழுது பொருத்தமான உடைகளை அணிந்து வரவும்.

தெருவில் நடக்கும் விழாக்கள்

# கலைப் படைப்புகள்

சனிக்கிழமை

**6 ஜுலை**

பாரம்பரியக் கொண்டாட்ட மேடை, ஜியார்ஜ் டவுனின் வளமான கலாச்சாரப் பன்முகத் தன்மையைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் சடங்குகளிலிருந்தும், விழாக்களிலிருந்தும் நடனங்கள், இசை மற்றும் கதை சொல்லுதல் இவற்றை ஒருசேரக் கொண்டுவருகிறது.

## முக்கிய அரங்கம்

ஆர்மீனியன் பார்க்

மாலை **6.30** — இரவு **10.30**

### மாலை 6.30

**மாக் யோங்க் "இளம் தேவர்கள்"**
மாக் யோங்க் ஸ்ரி பாயு அழகிய வதனம்
மனிதனின் தொட்டறிய முடியாத வாய் வழி, பாரம்பரியத்தின் சிறந்த படைப்புக்களுள் ஒன்றாக யுனெஸ்கோவால் பட்டியலிடப் பட்டுள்ள மாக் யோங்க் என்னும் மலாய் பாரம்பரியப் படைப்பு .நடனம், பாடல், நாடகம், நகைச்சுவை இவற்றை உள்ளடக்கியது.

**காவடி ஆட்டம்**
நுண் கலைக் கோவில்
மயில் இறகுகளால் அலங்கரிக்கப்பட்ட காவடி முருகனின் வாகனத்தைக் குறிக்கிறது. பக்தர்கள் தங்கள் தெய்வீகப் பயணத்தின் பொழுது ஆடிச்செல்லும் இந்த நடனம் பறவைகளின் இயக்கங்களை ஒருங்கிணைக்கிறது.

**ஹக்கா பிக்ஸ்யூ நடனம்**
பினாங்கு ஹக்கா சங்கம்
அறுவடைக் காலத்தில் ஆடும் இந்த நடனம் பிக்ஸியும் விவசாயி தொப்பிகளையும் கொண்டுள்ளது. இது விவசாயிகள் நிலத்தில் உழைக்கும் கஷ்டங்களைச் சமாளிப்பதற்கு உதவும் பாடல்களைக் கொண்ட யாங்க்கி எனும் இசையுடன் நிகழ்த்தப் படுகிறது.

### இரவு 7.45

**குழு பாடல்**
பினாங்கு பில்ஹார்மொனிக் கழக பாடகர் குழு
இசைக்கருவிகளற்ற கெபெல்லா கோரல் எனும் வாழ்க்கைச் சுழற்சியைக் கொண்டாடும் இந்த இசைக்கலவை, குழந்தைப் பருவம், வயதுக்கு வருதல், காதல் வயப் படுதல் இறுதியாக மரணம் இவற்றின் வழியாக உங்களை இட்டுச் செல்கிறது.

**டியோச்யூ கூத்து "ஓடையின் குறுக்கே டூயெட்"**
டியோச்யூ பாவை நடன கூத்து அரங்கம்
தியோச்யூ இசைக்கூத்து, பாடல், நடிப்பு மற்றும் தற்காப்புக் கலைகளை ஒன்றுபடுத்தியது. நாடகத்தின் பாத்திரங்கள், விவசாயம் மற்றும் வாழ்வின் கலாச்சார அம்சங்களுக்காக அமைக்கப்பட்ட வழிகாட்டியான 24 சூரிய குடும்பத்தைப் பற்றி ஆழமாகப் பேசுகிறார்கள்.

**ஷிமொகிடா ஓண்டொ**
கிக்யோ ஹானா
மறுபக்கத்திலிருந்து வருகை தரும் மூதாதையர்களைக் கௌரவிக்கும் ஒரு ஜப்பானிய புத்த கலாச்சாரமான " பான் ஒடோரி" யின் பொழுது, வாழ்க்கையைப் பாராட்டி நிகழ்த்தப்படும் ஒரு மகிழ்ச்சியான நடனம்.

**அவாங்க் படில்**
நைன்ஃப்லிக்ஸ் நிகழ்ச்சி நிர்வாகக் குழு
ரம்லி மஹ்முத், அவாங் பாடில் கதையின் கதை மற்றும் பழக்கவழக்கங்களை முற்றிலும் கூறமுடிந்த கடைசி பெங்லிபூர் லாரா கதையாசிரியர், அவர் 2015 ஆம் ஆண்டு தேசிய உயிரோட்டமுள்ள பாரம்பரியத்திற்கான விருதைப் பெற்றார்.

### இரவு 9.00

**கேமெலன்**
வக் லொங்க் இசை மற்றும் கலை மையம்
பாரம்பரியமாக மலாய் அரச நிகழ்வுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இந்த சமகால காமெலான் படைப்பு, கிளாசிக் தாய் மற்றும் சீன பாடல்களை உள்ளடக்கியதாக் உருப்பெற்றுள்ளது. இந்தக் குழுமத்துள் இடம்பெற்றிருக்கும் முக்கிய இசைக்கருவிகள், மெடலஃபோன்ஸ், மற்றும் பல்வேறு மத்தளங்கள் அடங்கிய தாள வாத்தியங்களாகும்.

**கர்னாடக இசை காவடி சிந்து**
நுண் கலைக் கோவில்
காவடி எடுத்துச் செல்லும் பக்தர்களை அவர்கள் பக்தி வழிப்பயணத்தில் ஊக்குவிப்பதற்காக இசையுடன் பாடப் படுகிறது. காவடி சிந்து, கர்நாடக சங்கீதம் எனும் தென்னிந்திய வாய் பாட்டு முறையில் பாடப் படுகிறது.

**மத்தளங்கள்**
லௌட்ஸ் தாள வாத்தியக் குழு
துரதிர்ஷ்டத்தைத் துரத்தி அடித்து, நன்மையைக் கொண்டு வரும் என நம்பப்படும் மத்தள இசை, சீனர் திருமணங்கள், வியாபாரத் திறப்பு விழாக்கள், மற்ற விழாக்களிலும் பிரதானமாக இசைக்கப் படுகிறது.

**டிகிர் பாரட்**
டிகிர் பாரட் முதியாரவின் குரல்
பக்கபல பாடகர்கள் கால்களைச் சம்மணமிட்டு தரையில் அமர்ந்திருக்க தலைவர், அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளையும், சமூக, அரசியல் பிரச்சனைகளையும், நகைச்சுவை மற்றும் நையாண்டி கலந்த பாடல்களுடன் வழி நடத்துகிறார்.

**சிங்க நடனம்**
பினாங்கு மளிகைக் கடைகள் சங்கம்
சிங்க நடனக் கலைஞர்கள், சீனக்குடும்பக்களுக்கும், வர்த்தகத்திற்கும் சிறப்பு நாட்களில் ஆடும்பொழுது, நல்ல அதிர்ஷ்டத் தடைகளின் அடையாளங்களை அகற்றுகின்றனர்.



## நடன அரங்கம்

ஜலான் மஸ்ஜிட் கபிதான் கெலிங்

மாலை **7.00** — இரவு **11.00**

### மாலை 7.00

**ஹனகசா ஓடோரி**
கிக்யோ ஹனா
யமகடா ஹனகாசா திருவிழாவின் பொழுது நடத்தப்படும் ஹனகசா ஓடோரி எனும் ஒரு ஜப்பானிய நாட்டுப்புறப் பாடலானது, உற்சாகமான மத்தள இசை மற்றும் மலர்களால் அலங்கரிக்கப் பட்ட வைக்கோல் தொப்பிகளை அணிந்தவர்களின் நடனத்துடன் கூடியது.

### இரவு 7.45

**ராஸ் கர்பா**
பினாங்கு குஜராத்தி சம்மேளனம்
புராணங்களின் படி, ராஸ் கர்பா கிருஷ்ண பகவானால் அடைக்கல மளிக்கப்பட்ட பெண்களின் நடனத்திலிருந்து தோன்றியது. இது அனைத்து குஜராத்தி விழாக்களிலும் நிகழ்த்தப்படும் மகிழ்ச்சியும் அற்பணிப்பும் ஒன்றிய நடனமாகும்.


**ஹக்கா பிக்ஸூ நடனம்**
பினாங்கு ஹக்கா சங்கம்
பிக்ஸியு குடும்ப நலனைப் பாதுகாத்து, தங்கம், வெள்ளி மற்றும் அணிகலங்களை உண்ணுகிறது ஆனால் வெளிக்கொணர முடியாது. இந்த அறுவடை நடனம் செல்வத்தைப் பெறுவதையும் அதைத் தக்க வைத்துக் கொள்வதையும் குறிக்கிறது.

### இரவு 9.00

**கிட்தாவும் பங்க்ராவும்**
சீமா தில்லொன் நடனக் குழு
விழாக்களின் பொழுது பெண்களால் படைக்கப்படும், தாளக் கை தட்டலுடன் கூடிய ஒரு ஆற்றல் மிகுந்த நாட்டுப்புற நடனம். பங்க்ரா நடனக் கலஞைர்கள், தொல் மத்தளத்தின் ஏற்ற இறக்கத் தாளத்திற்கேற்ப உதைத்தும், பாய்ந்தும் தங்கள் உடல்களை வளைத்தும் ஆடுகிறார்கள்.

**ராக் அண்ட் ரோல்**
பினாங்கு ஐரோப்பிய ஆசிய சங்கம்
ராக் அண்ட் ரோல் ஐம்பதாம் ஆண்டுகளில் உருப்பெற்றது. லிண்டி ஹொப்ஸின் கழைக் கூத்தாட்ட நகர்வுகளை இரவல் வாங்கி, பதின்ம வயதினர் வேகமான தாளத்திற்கு, தங்கள் ஜோடிகளுடன் குலுங்கி ஆடினர். இன்று ஐரோப்பிய ஆசியத் திருமண விழாக்களின்போது இது ஒரு விருப்பமான நடனமாக உள்ளது.

**மூங்கில் நடனம்**
வக் லொங்க் இசை மற்றும் கலை மையம்
சபாவின் முருட் பழங்குடியினரின் சடங்கு நடனமான, மூங்கில் நடனம், நடனக் கலைஞர்கள் கால் அசைவுகளையும், தாளத்தையும் வழி நடத்தும் மூங்கில் துருவங்களுக்குக் குறுக்கே லாவகமாக, குதித்து ஆடுவதை உள்ளடக்கியது.






## மற்ற நிகழ்வுகள்

நீங்கள் இந்த நகரத்தில் இருப்பதால், இத்தீவில் நடைபெறும் மற்ற பரபரப்பான விழாக்களுக்காகக் காத்திருங்கள். ஜுலை மாதம் முழுவதும், பினாங்கின் பல மரபுகள், திறமைகளின் பன்முகத்தன்மையைக் கொண்டாடும் பல்வேறு நிகழ்வுகள் நிரம்பியுள்ளது.

**புனித ஜியோர்ஜ் தேவாலயம் பாரம்பரிய தினம்**
- 6 ஜுலை 2019
- மாலை 5 - இரவு 9 மணி வரை
- அர்மேனியன் தெரு
- +6011 1098 0881

**புனித ஜியோர்ஜ் தேவாலயம் பாரம்பரிய தினம்**
- 6 ஜுலை 2019
- காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை
- St. George's Church
- stgeorgeschurchpenang.com

**மெங்க் எங்க் சூ**
- 7 ஜுலை 2019
- மாலை 4 மணி - இரவு 10 மணி வரை
- பின்தால் தலி தெரு
- 名英祠 Meng Eng Soo

**ஜியோர்ஜ் டவுன் திருவிழா**
- 13 ஜுலை - 21 ஜுலை
- +6012 664 6251
- George Town Festival

**பினாங்கு மலை(கொடி மலை)விழா**
- 18 ஜுலை - 21 ஜுலை
- காலை 8 முதல் இரவு 10 மணி வரை
- பினாங்கு மலை(கொடி மலை)
- +604 828 8880

**பினாாங்கு பொன் ஒடோரி விழா**
- 20 ஜுலை 2019
- மாலை 6 முதல் இரவு 10 மணி வரை
- குவீன்ஸ் பே மால் திறந்தவெளி கார் நிறுத்துமிடம்
- +604 650 5133

George Town Heritage Celebrations 2019

LET'S CELEBRATE!

## தெருவில் நடக்கும் விழாக்கள்

# சமூகப் பட்டறைகள்

**6 ஜூலை** சனிக்கிழமை | மாலை **6.00** – இரவு **11.00**

நகரத்தின் பழங்காலச் சடங்குகளையும் விழாக்களையும் அறிந்து கொள்வதற்கு, அதன் ஒரு பகுதியை நீங்களே அனுபவிப்பதை விடச் சிறந்த வழி என்ன இருக்கமுடியும்? சமூக வல்லுனர்களிடமிருந்தே கற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் ஏற்பாடு செய்திருக்கும் பட்டறைகளில் சுறு சுறுப்பாகக் கலந்து கொள்ளுங்கள். இவை அனைத்தையும் நீங்கள் ஒரே இரவில் முடிக்க முடியுமா?

### பொது நினைவூட்டல்கள்

**நிகழ்வுக்கு ஏற்ப ஆடை :** நிகழ்வுக்கு மற்றும் வானிலைக்கு ஏற்ப ஆடை அணியுங்க்கள்

**நீர் நிலையம்:** நாங்கள் தண்ணீர்ஏற்பாடு செய்துள்ளோம், உங்க்கள் பாட்டில்களை கொண்டு நிரப்பிக் கொள்ளவும்

**போக்குவரத்து நெரிச்சல்:** பஸ் அல்லது ஒருகாரில் இணைந்து வரவும்

**#GTHC2019 :** நீங்க்கள் என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்துக் கொள்ளுங்க்கள்

### 1 மணமக்கள் வரவேற்பு விழா

மணமக்கள் வருகையை அறிவிக்கும் கொம்பங்க் எனும் கையில் பிடிக்கக்கூடிய மத்தளத்தை இசைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

— லெபுஹ் அச்செஹ் மலாய் மசூதிபாரம்பரிய அமைப்பு

### 2 மருதாணி இரவு மாலாம் பெர் இனை

இந்திய இஸ்லாமியத் திருமணத்திற்குச் சில தினங்களுக்கு முன், மணமகளின் விரல் நுனிகளும் பாதமும் மருதாணியால் அலங்கரிக்கப்படும். மணமகனின் ஒவ்வொரு கையிலும் மூன்று விரல்களில் வண்ணம் தீட்டப்படும். இது அவர்களுக்கு நிகழவிருக்கும் திருமணத்தின் ஆசீர்வாதத்திற்கான அறிகுறி.

— புலெள பினாங்கு இஸ்லாமிய லீகா

### 3 இன்சுலுங்க்

ஜெர்மனியில், குழந்தை பாலர் பள்ளியிலிருந்து, ஆரம்பப் பள்ளிக்கு செல்வதைக் கொண்டாடும் வகையில் அக்குழந்தைக்கு ஷூல்லுட் எனும் விருந்துப் பொருட்களும் விளையாட்டுச் சாமான்களும் நிறைந்த ஒரு கூம்பு பள்ளியின் முதல் நாளன்று வழங்கப்படுகிறது.

— மலேசியன் ஜெர்மானிய சமூகம்

### 4 நிச்சயதார்த்தம்

நெய் உருண்டை (இனிப்பான நெய் உருண்டைகள்) நிச்சயதார்த்த விழாவின்போது மணமகன் மணமகளுக்கு அளிக்கும் பல்வகையான பரிசுப்பொருள் தாம்பாளங்களுள் ஒன்றாகச் சேர்க்கப் படுகிறது.

— பினாங்கு இந்து சங்கம்

### 5 ஹினாமட்சுரி

இந்த சிறப்பு ஜப்பானிய “பெண் தினத்தன்று” பெண்களுக்கு அதிர்ஷ்டம், உடல் நலம், மகிழ்ச்சி மற்றும் ஒரு நல்ல திருமணம் அமைவதற்காக ஒரிகாமி பொம்மைகள் மடிக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப் படுகின்றன.

— மலேசிய ஜப்பானிய சமூகம்

### 6 டுஓ ஷி

குழந்தையின் முதல் பிறந்த நாளன்று, பல வகையான பொருட்கள் குழந்தையைச் சுற்றி வைக்கப் படுகிறது. உதாரணத்திற்கு, குழந்தை ஒரு அளவு கோலை இழுத்தால், அது தொழில் முனைவோர் என்று அர்த்தம். ஒவ்வொரு பொருளுக்கும், அதன் குறியீட்டுக்குமான ஹொக்யியன் உச்சரிப்புகளைக் கற்றுக்கொள்ளவும்.

— பினாங்கு ஹோக்கின் சங்கம்

### 7 சங்கீத்

சங்கீத் எனும் குஜராத்தி திருமணத்திற்கு முந்தைய கொண்டாட்டம், மணத்தம்பதியினரின் இரு குடும்பங்களையும் இசை மற்றும் நடனம் வழியாக ஒன்றாக இணைக்கிறது. ரங்கோலி எனும் அரிசி மாவினால் ஆன கோலமும் உருவாக்கப் படுகிறது, அது நலமுடன் இருப்பதைக் குறிப்பதாகவும் ஒரு வரவேற்புச் சின்னமாகவும் அமைகிறது.

— பினாங்கு குஜராத்தி சமாஜம்

### 8 முவ குஎக்

ஒரு மாத பேர்னகன் குழந்தைகள் அவர்களுடைய முன்னோர்களுக்கு இந்த விழாவின்போது அறிமுகப்படுத்தப் படுவர். உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அனுப்பபடும் உணவு வகைகளுள் கடின வேகவைத்த முட்டையுடன் பேரின்பத்தையும், வளத்தையும் குறிக்கும், அங்க் கூ குஎஹ் உணவும் ஒன்றாகும்.

— மாநில சீன (பினாங்கு) சங்கம்

### 9 முவா குயு

ஒரு குழந்தையின் முழு நிலவு கொண்டாட்டத்தின் போது அர்ட் புஆ என்னும் உலர்ந்த தேங்காயில் புரட்டப்பட்ட ஒரு பிசுபிசுப்பான அரிசி கேக் தங்கள் முன்னோர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஹைனானீஸால் வழங்கப்படுகிறது.

— பினாங்கு ஹைனன் சங்கம்

### 10 சடங்கு கழித்தல்

செட்டியார்கள் சடங்கு கழித்தலின் போது கேப்பை ரொட்டி என்னும் சிறுதானிய ரொட்டி செய்கிறார்கள். அது சமயம் அப்பெண் புதிய ஆடைகளினால் அலங்காரம் செய்யப்பட்டு, பெரியவர்களால் ஆசீர்வதிக்கப் படுகிறாள்.மணிக்கு ஒரு முறை செய்து காட்டப் படும் ஒரு பாரம்பரிய இந்திய முஸ்லீம் திருமணக் கொண்டாட்டத்தை நழுவவிடாதீர்கள்.

— நாட்டுக்கோட்டை நகரத்தார் பாரம்பரிய சமூகம்

### 11 பெலிலொ ஜில்லகர்ரா பெல்லம்

திருமணச்சடங்கின்போது, சீரகமும் வெல்லமும் சேர்ந்த ஒரு பசையைத் தம்பதியினர் ஒருவர் மற்றவர் தலையில் தடவுவர். இது கசப்பான மற்றும் இனிமையான தருணங்களிலும் பிரிக்க முடியாத ஒரு பிணைப்பைக் குறிக்கும். இதன் பிறகு கொங்குரா போன்ற சுவையான உணவுகளுடன் விருந்து நடைபெறும்.

— மலேசிய தெலுகு சங்கம், பினாங்குக் கிளை

### 12 மன் ந்யிஎட்

குழந்தை ஒரு மாதம் நிறைவு பெறும்பொழுது ஹக்காக்கள் விருந்தினருக்கு ஜிபா வழங்குகிறார்கள். குழந்தையின் ஆரோக்கியத்திற்கான இக்கொண்டாட்டத்திற்கு உறவினர்கள் பரிசுகளும் வாழ்த்துக்களும் வழங்க வருகிறார்கள்.

— பினாங்கு ஹக்கா சங்கம்

### 13 திருமண வலீமா விருந்து

மணையில் இருத்தல் கொண்டாட்டத்தின் போது, அரிசியையும் பூவிதழ்களையும் பொழிந்த பிறகு (மக்கட் பேற்றின் அடையாளம்) இந்திய முஸ்லீம் தம்பதியினர், பல்லாங்குளி விளையாடுவார்கள். இது அவர்கள் இருவருக்கும் இடையே இறுக்கத்தைக் குறைக்க உதவும்.

— கப்பிடான் கெலிங் மசூதி கயார்யா செயற்குழு மற்றும் மலேசியா இந்திய முஸ்லீம் சமூக அமைப்பு (ஐஎம்.காம்)

### 14 கௌன் படொன்னா

திருமணத்திற்கு முந்திய இரவு, அனைவரும் திருமண ஏற்பாடுகளிலிருந்து சற்று இடைவெளி எடுக்கிறார்கள். சில பாரம்பரியப் பாடல்களுக்குப் பின் பஞ்சாபிகள் முறையே பெண் வீட்டிலும், மாப்பிளை வீட்டிலும் நடனமாடுவார்கள். கிட்தா அனைத்து மகிழ்ச்சியான நிகழ்வுகளிலும் படைக்கப்படும் ஒரு ஆற்றல்மிக்க நடனமாகும்.

— வட்டா குர்த்வரா சஹிப் புலெள பினாங்கு

### 15 குக் ஹ்யூ ஹிங்க்

த்யோச்யூ 15வயது, வயதுக்கு வரும் விழாவின்போது ‘சன் கக் க்யூ’ செய்யப்படுகிறது. இந்த உருண்டைகள், நல்ல ஆரோக்கியம், அதிர்ஷ்டம் மற்றும் நிதி நிர்வாகம் இவற்றைக் குறிக்கும் பொருட்களால் நிறப்பப் பட்ட ஒரு பணப்பையின் அடையாளமாகும்.

— பினாங்கு த்யோச்யு சங்கம்

### 16 மைலாஞ்சி ராவு

ஓப்பனா என்பது குடும்பத்துப் பெண்கள் மைலாஞ்சி இரவன்று மணப்பெண்ணுக்குப் படைக்கும் மலையாளி இஸ்லாமிய பாடலுடன் கூடிய நடனம். மணமகளின் கைகளையும் பாதத்தையும் ஹேனா டிசைன்களுடன் அலங்கரிக்க ஒரு நிபுணர் அமர்த்தப்படுகிறார்.

— வட மலேசிய மலயாளி சமாஜம்

### 17 சுகுர் ஜம்புல் விழா

மலாய் கலாச்சாரத்தின்படி ஒரு குழந்தையின் தலை முடி அது பிறந்த ஏழாவது நாள் எடுக்கப்படப் பரிந்துரைக்கப் படுகிறது. இந்த முடி எடுக்கும் சடங்கை ஒட்டி நடை பெறும் விருந்தில் உபசரிப்பாளர் விருந்தினருக்கு புங்கா தெலோரை வழங்குவர். மலர் போல அலங்கரிக்கப் பட்ட கடின வேகவைத்த முட்டை குழந்தைச் செல்வத்தைக் குறிக்கிறது.

— பாலிக் புலெள பாரம்பரியம்

### 18 ரொட் நம் சங்க்

சயாமீஸ் தம்பதியினருக்கு, அவர்கள் திருமணத்தன்று அவர்கள் பெற்றோர்களால் அணிவிக்கப்படும் ஃபுஆங்க் மாலை என்னும் மலர் மாலையைச் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். இதனைத் தொடர்ந்து, விருந்தினர்கள் புதுமணத் தம்பதியினரை ஆசீர்வதிக்கும்போது சங்குகளிலிருந்து புனித நீரை அவர்கள் உள்ளங்கையில் ஊற்றுகின்றனர்

— பினாங்கு சயாமீஸ் சங்கம்

### 19 கெ ஷுஆ

ஹோக்கின் திருமண நாளன்று, மணமகன் மணமகளைத் தன் குடும்பத்திற்கு வரவேற்கும்போது ஓதப்படும் kau in ê si kù ஆசீர்வாதப் பாடல்களில் சிலவற்றைத் தெரிந்து கொள்ளுங்கள்.

— பினாங்கு உன் குவே ஹோய் குஅன்

### 20 திருமண வரவேற்பு

50 ஆம் 60 ஆம் ஆண்டுகளில் பிரபலமடைந்த அமெரிக்கன் ராக் 'என்' ரோல் நடனம் இன்னும் இங்கே யூரேசிய குடும்பங்களில் குறிப்பாக திருமணங்களிலும் மற்றும் பல மகிழ்ச்சியான தருணங்களின்போதும் மிகவும் விருப்பமான நடனமாக இருக்கிறது.

— பினாங்கு யுரேசியன் சங்கம்

### 21 ஞோன் குஒங்க்


கெந்தொனஸ்திருமணத்திற்கு முன், மணத்தம்பதியினரை திருமணப் பேரின்பமும், நிறைவான குழந்தைச் செல்வங்களையும் பெற ஆசீர்வதிப்பதற்கு, திருமண படுக்கைச் சடங்கு நடைபெறும். மகிழ்ச்சியான திருமணங்களுக்கு மணமகன் வீட்டிலும் அறைக் கதவுகளிலும் பன் வா என்றழைக்கப்படும் மங்கலமான வடிவங்களும், சொற்றொடர்களும் அச்சிடப்பட்ட மரச் சில்லுகள் ஒட்டப்படும்.

— க்வாங்க்துங்க் மற்றும் டெங்க்செள சங்கம்

### 22 மையான்

மையான் சீக்கியத் திருமணத்திற்கு முன் நடக்கும் சடங்கு. இதில் திருமணத்தன்று ஒளிரும் தோலைக் கொடுப்பதற்காக தம்பதியினர் மஞ்சளும் தயிரும் கலந்த கலவையால் பூசப்படுகிறார்கள். திருமண முதல் நாள் மாலை சங்கீட் பங்க்ரா நடைபெறும். அனைவரும் இந்த மகிழ்ச்சியான தருணத்தைக் கொண்டாடுவதற்காக நடனமாடுவர்.

— சிக் நெளஜவன் சபா (பினாங்குக் கிளை)



ஏற்பாட்டாளர்

GEORGE TOWN WORLD HERITAGE INCORPORATED

அங்கிகாரர்

ஒத்துழைப்பு

Penang GLOBAL TOURISM (State Tourism Bureau)

UNESCO United Nations Educational, Scientific and Cultural Organization

Malaysian National Commission for UNESCO

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

MJS

Nattukottai Nagarathar Heritage Society

Wadda Gurdwara Sahib Penang

SIKH NAUJAWAN SABHA MALAYSIA (PENANG BRANCH)

State Chinese (Penang) Association

கலைப்படைப்பு ஒருங்கிணைப்பாளர்

Penang Philharmonic

nine flix

Penang Grocers' Association

Seema Dhillon Punjabi Dance Group

இட ஆதரவாளர்கள்

THE MAJESTIC THEATRE

போக்குவரத்து ஒருங்கிணைப்பாளர்

Grab

linkBike Cycling Made Easy

Bike Share

அறிக்கையில் உள்ள அனைத்து தகவல்களும் அச்சடிக்கும் நேரத்தில் சரியானவை.
மேல் விவரங்கள் பெற தொடர்புக் கொள்ளவேண்டியது:

George Town Heritage Celebrations

gtwhi.com.my/gthc2019

heritagecelebrations

+6017 428 1848

பதிப்புரிமை © *2019* ஜோர்ஜ் டவுன் உலக பாரம்பரிய வாரியம் *(GTWHI)*. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. வணிகமற்ற நோக்கங்களுக்காக உள்ளடக்கத்தை மறுசீரமைப்பு செய்ய *GTWHI* இன் விளக்கமான எழுத்துப் பூர்வ அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.